TNTP010018232026

**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**
**<u>திருச்சிராப்பள்ளி</u>**

முன்னிலை : **திரு.S.கோபிநாதன், பி.எஸ்.சி, பி.எல்.,**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி

2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 17–ம் நாள் புதன்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண். 139/2026</u>**

**<u>CNR.No. TNTP01–001823–2026</u>**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்,<br>நவல்பட்டு காவல் நிலைய<br>குற்ற எண். 40/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | | முத்துசாமி (வயது 58/2026) த/பெ ராசு,<br>எண்.1/47, வடக்கு தெரு,<br>பெரிய சூரியூர்,<br>திருவெறும்பூர் தாலுகா,<br>திருச்சி மாவட்டம். |
| சம்பவ நாள் | | 13.03.2025 |
| புகார் நாள் | | 13.03.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 13.03.2025 |
| எதிரிக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவுகள் | : | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 275, 123 of BNS Act r/w Section 24(1), 6(b) of COTPA Act கீழ் குற்றசாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| எதிரியின் பதிலுரை | & | குற்றவாளி இல்லை |
| தண்டனை அல்லது உத்தரவு | & | **முடிவாக,** அரசு தரப்பு எதிரி மீதான குற்றசாட்டுகளான சட்டப்பிரிவுகள் 275, 123 of BNS Act r/w Section 24(1), 6(b) of COTPA Act ன் கீழ் எதிரிக்கு எதிராக முற்றிலும் நிரூவிக்க தவறிவிட்டது என கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் முடிவு செய்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிடுகிறேன். |
| வழக்கு சொத்திற்கான உத்தரவு | | இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட புகையிலை பொருட்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து **17.06.2026** தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் **திரு.A.பாலசுப்பிரமணியன்,** அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.சரவணமுத்து** அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3 திருச்சிராப்பள்ளி நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.396/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் மேல்விசாரணைக்காக

திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது.

**1. <u>இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –</u>**

அரசு தரப்பு வழக்கானது, கடந்த 13.03.2025 ம் தேதி 17.00 மணிக்கு பெரியசூரியூர் வடக்கு தெருவில் உள்ள ஒரு பெட்டிக்கடையில் எதிரி முத்துசாமி என்பவர் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட உடல் நலத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய புகையிலை பொருட்களான Hans Chaap Tobacco, Vimal Pan Masala புகையிலை பொருட்களை குறைந்த விலைக்கு வாங்கி அதிக இலாபம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் பொதுமக்களுக்கு உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்று தெரிந்தே பள்ளிக்கு 100 மீட்டர் தொலைவில் விற்பனை செய்ய வைத்திருந்த செய்கையானது தண்டிக்கதக்க குற்றமாகும். எனவே, எதிரி பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 275, 123 மற்றும் 6(b), 24(1) COTPA Act ன் கீழ் தண்டிக்கதக்க குற்றங்கள் புரிந்துள்ள தா நவல்பட்டு காவல் ஆய்வாளர் அவர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கானது முதலில் வழக்கு கோப்பானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.396/2025 ஆக குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, திருச்சிராப்பள்ளியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல் யாவும் கு.வி.மு.ச.207 ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 275, 123 of BNS Act r/w Section 24(1), 6(b) of COTPA Act–ன்

கீழான குற்றச்சாட்டு என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.139/2026 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் கு.வி.மு.ச பிரிவு 226ன் கீழ் அரசு தரப்பில் வழக்கு சங்கதிகள் குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கை திறந்து வைத்தார். இரு தரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிகக்கு எதிராக தகுந்த முகாந்திரம் இருப்பதால் BNSS பிரிவு 250 உ/இ பிரிவு 251ன் படி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 275, 123 of BNS Act r/w Section 24(1), 6(b) of COTPA Act ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

4. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின் எதிரியிடம் அரசு தரப்பு, குற்றம் பற்றி விளக்கி கேட்டபோது குற்றத்தை மறுத்தரைத்தார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் தனது வழக்கினை மெய்பிக்க வேண்டி **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், **அ.த.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் எதையும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:**

6.1) அ.சா.1 சதீஷ்குமார் தலைமை காவலர் தனது சாட்சியத்தில் நான் திருச்சி, நவல்பட்டு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.03.2025–ம் தேதி நவல்பட்டு காவல் நிலைய ஆய்வாளர் பிரதீபா, காவலர் வேல்முருகன் என்பவருடன் நான் ரோந்து அலுவலகாக இலந்தப்பட்டி, சின்ன சூரியூர், பெரியசூரியூர் பகுதிகளில் ரோந்து செய்த பொழுது உதவி ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் பெரிய சூரியூர் வடக்கு தெருவில் உள்ள ஒரு கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வதாக தகவல் கிடைத்தது.

அந்த தகவலின் பேரில் அந்த கடைக்கு சென்று சோதனையிட்ட போது அந்த கடையின் உரிமையாளர் முத்துசாமி, த/பெ.ராஜு என்பவர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களான 263 ஹான்ஸ் பாக்கெட்டுகள், 300 விமல் பாக்கு பான் மசாலா வைக்கப்பட்டிருந்ததை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்.

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பொருட்களான ஹான்ஸ், விமல் பாக்கு பான் மசாலா ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் பொது மக்கள் யாரும் சாட்சியாக முன்வராத காரணத்தினால் நானும், உடன் இருந்த காவலர் வேல்முருகன் என்பவரையும் சாட்சியாக கையெழுத்திட்டோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 வேல்முருகன் முதல்நிலை காவலர் தனது சாட்சியத்தில் நான் திருச்சி, நவல்பட்டு காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.03.2025–ம் தேதி நவல்பட்டு காவல் நிலைய

ஆய்வாளர் பிரதீபா, காவலர் சதீஸ்குமார் என்பவருடன் நான் ரோந்து அலுவலகாக இலந்தப்பட்டி, சின்ன சூரியூர், பெரியசூரியூர் பகுதிகளில் ரோந்து செய்த பொழுது உதவி ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் பெரிய சூரியூர் வடக்கு தெருவில் உள்ள ஒரு கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வதாக தகவல் கிடைத்தது.

அந்த தகவலின் பேரில் அந்த கடைக்கு சென்று சோதனையிட்ட போது அந்த கடையின் உரிமையாளர் முத்துசாமி, த/பெ.ராஜு என்பவர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களான 263 ஹான்ஸ் பாக்கெட்டுகள், 300 விமல் பாக்கு பான் மசாலா வைக்கப்பட்டிருந்ததை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்.

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பொருட்களான ஹான்ஸ், விமல் பாக்கு பான் மசாலா ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் பொது மக்கள் யாரும் சாட்சியாக முன்வராத காரணத்தினால் உடன் இருந்த காவலரும் நானும் சாட்சியாக கையெழுத்திட்டோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 பிரதீபா சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் நான் தற்சமயம் திருச்சி மாவட்டம், சிங்கப்பெண் அதிரடி படையில் காவல் உதவிஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 13.03.2025 ம் ஆண்டு நவல்பட்டு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது காவலர்கள் சதீஸ்குமார் மற்றும் வேல் முருகன் ஆகியோருடன் பெரிய சூரியூரில் ரோந்து பணியில் இருந்த பொழுது முத்து சாமி என்பவருடைய

பெட்டிக்கடையை சோதனை செய்த பொழுது தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள் 263 மற்றும் விமல் பான் மசாலா 300 பாக்கெட்டுகள் ஆகியவற்றை லாபம் ஈட்டும் நோக்கத்தில் விற்க வைத்து இருந்த ஆஜர் எதிரியை விசாரணை செய்து கைது செய்தேன்.

கைது செய்த நேரம் 13.03.2025ம் தேதி மாலை 05.00 மணி ஆகும். பின்பு அவரிடம் இருந்த பாக்குகளை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். உடன் இருந்த காவலர்கள் அதற்கு சாட்சியாக கையெழுத்து செய்தார்கள். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.1**. 263 ஹான்ஸ் பாக்கெட்டுகள் மற்றும் விமல் 300 பாக்கெட்டுகளுக்கான போட்டோ **அ.த.சா.ஆ.2**. பின்பு எதிரி மற்றும் தடய சொத்துக்களை நிலையம் வந்து நிலைய குற்ற எண்.40/2025–ன் படி சட்டப்பிரிவுகள் 275, 123 BNS மற்றும் பிரிவு 6 (b), 24(1) of COTPA Act –ன் கீழ் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆகும்.

எதிரியை திரேக பரிசோதனைக்கு பிறகு நீதிமன்ற காவலுக்கு பரிந்துரைத்தேன். வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். பின்பு விசாரணை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது.

7) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான குற்றசாட்டு எல்லாவித நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதுதான்.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**<u>தீர்வு:–</u>**

இந்த வழக்கில் அரசு தரப்பில் 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன.

அ.சா.1 மற்றும் அ.சா.2 காவலர்கள் தங்களது சாட்சியத்தில் எதிரி தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்வதாக கிடைத்த ரகசிய தகவலின்படி சம்பவ இடம் சென்று எதிரி முத்துசாமியின் கடையை சோதனை செய்த பொழுது தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களான ஹான்ஸ் மற்றும் பாக்குகள் வைத்து இருந்ததாகவும், மேற்படி பொருட்களை எதிரியிடம் இருந்து கைப்பற்றி எதிரியை கைது செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். இவர் எதிரியை கைது செய்தது குறித்தும், எதிரியிடமிருந்து புகையிலை பொருட்களை கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

புகையிலை பொருட்கள் எங்கிருந்து வந்தது என்பது பற்றி விசாரணை எதுவும் செய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களை தடய ஆய்வுக்கு உட்படுத்தி அது போதை பொருளை சார்ந்தது என்பது பற்றி விசாரணை செய்யப்படவில்லை. இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை சான்ரூட்டும்படி எந்த சாட்சியமும்

சாட்சியம் அளிக்கவில்லை. எதிரிக்கு எதிராக எந்தவித பொது ஜன சாட்சிகளையும் விசாரணை செய்யவில்லை. மேற்படியோர்களின் சாட்சியத்தை வைத்து இந்த வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டு சம்பந்தமாக நிரூபிக்கும் அளவிற்கு எந்தவித சங்கதியும் இல்லை.

**முடிவாக**, அரசு தரப்பு எதிரி மீதான குற்றசாட்டுகளான சட்டப்பிரிவுகள் 275, 123 of BNS Act r/w Section 24(1), 6(b) of COTPA Act ன் எதிரிக்கு எதிராக முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் முடிவு செய்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிடுகிறேன்.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட புகையிலை பொருட்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரிடையாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் **2026–ம் வருடம் ஜூன் மாதம் 17**–ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
தேதி : 17.06.2026

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | சதீஸ்குமார், தலைமை காவலர் |
| அ.சா.2 | வேல்முருகன், முதல் நிலை காவலர் |
| அ.சா.3 | பிரதீபா, சார்பு ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

<u>Judicial Form No.68</u>

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | – | கைப்பற்றுதுல் மகஜர் |
| அ.த.சா.ஆ.2 | – | புகையிலை பொருட்களுக்கான போட்டோ |
| அ.த.சா.ஆ.3 | – | முதல் தகவல் அறிக்கை |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :** இல்லை

GOPINATHAN S
Digitally signed by GOPINATHAN S

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி : 17.06.2026